பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

27 07 2026 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேர்வுகள் தொடர்பான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக உயர்நிலை அதிகாரப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

2. தேர்வுகளில் முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. மேகதாது அணை தொடர்பான விவகாரத்தில் தமிழக மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

4. காவிரி நதிநீர் விவகாரம் குறித்து விவாதிக்க அனைத்து கட்சிக் கூட்டத்திற்கு மாநில அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

5. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் மீராபாய் சானு தங்கப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேர்வுகள் தொடர்பான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக உயர்நிலை அதிகாரப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

இது தொடர்பான காணொளிப் பதவில், இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

(Sound Byte – PM – 60 Sec)

இக்குழுவில் முன்னாள் புலனாய்வுப் பிரிவு இயக்குநர் திரு Tapan Deka முன்னாள் இஸ்ரோ தலைவர் திரு சோம்நாத், சென்னை இந்திய தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனத்தின் இயக்குநர் திரு வி காமகோடி, முன்னாள் கல்வித் துறை செயலாளர் திருமதி Anita Karwal தளவாடத் துறை நிபுணர் திரு. Amrit Lal Meena ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

இதனிடையே, பொதுத்தேர்வு முறைகேடுகள் தடுப்பு சட்டத் திருத்த மசோதா மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்படவுள்ளது.

பொதுத்தேர்வு முறைகேடுகள் தடுப்புச் சட்டம், 2024-ல், உரிய திருத்தங்களை மேற்கொள்ள வகை செய்யும் இந்த மசோதாவை, மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் இன்று தாக்கல் செய்கிறார்.

முன்னதாக, தேர்வு முறைகேடு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக விரைவு நீதிமன்றங்களை அமைக்கவும், முறைகேடுகளில் ஈடுபடுவோர் மீது கடும் தண்டனை வழங்கப்படுவதை உறுதி செய்வதற்குமான இந்த சட்டத் திருத்த மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஏற்கனவே ஒப்புதல் அளித்திருந்தது.

<<<<>>>>

மாணவர்களின் எதிகாலத்தைப் பாதுகாக்கும் வகையிலும், தேர்வுகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளில் மாற்றங்களை கொண்டு வருவதற்கும், அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவிட்டுள்ள அவர், இனி நடைபெறவுள்ள தேர்வுகளில் நம்பகத்தன்மையை உறுதி செய்யும் வகையில், வெளிப்படைத்தன்மை, தொழில்நுட்பம் சார்ந்த அம்சங்களில், இந்தப் பணிக்குழு கவனம் செலுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தேர்வுகள் தொடர்பான நடைமுறைகளில் எவ்வித சமரசமும் இல்லாமல், முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுக்கும் வகையில், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் டாக்டர் எல் முருகன் உறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மேகதாது விவகாரத்தில் தமிழக மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரத்தில், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மாநில அரசு செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

சிவகாசி பட்டாசு ஆலை விபத்து தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், முறையான அனுமதியின்றி செயல்படும் பட்டாசு ஆலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

அரசு ஊழியர்கள் தங்களது குறைகளை சம்பந்தப்பட்ட துறைகளின் செயலாளரிடம் தெரிவித்து தீர்வு காண வேண்டும் என்று அவர் கூறினார்.

அனைத்து துறைகளின் செயல்பாடுகளை மாநில லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் கண்காணித்து நடவடிக்கை எடுப்பது வழக்கமான நடைமுறை என்று திரு செங்கோட்டையன் தெரிவித்தார்.

<<<<>>>>

மேகதாது அணை தொடர்பான விவகாரத்தில், அனைத்து கட்சிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்திற்கு மாநில அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடக மாநில அரசுடன் நடத்தப்பட்ட பலகட்டப் பேச்சு வார்த்தைகள் பலனளிக்காத நிலையில், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதையும், கடந்த 2018-ம் ஆண்டில் இறுதித் தீர்ப்பு வழங்கியுள்ளதையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் படி அம்மாநில அரசு இதுவரை தமிழகத்திற்கு வழங்க வேண்டிய தண்ணீரை வழங்கவில்லை என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காவிரி நதிநீர் உரிமை குறித்து கருத்தொற்றுமையை உருவாக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு மாநில அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் இன்று ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

வேலூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் ஒருசில இடங்களில் வெப்பநிலை இயல்பைக் காட்டிலும் 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பிரான்சில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீ பரவி வருவதையடுத்து, நேற்று ஒரே நாளில், அப்பகுதிகளில் வசித்து வரும் 55 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

----------

ரஷ்யா-யுக்ரைன் இடையேயான வான்வெளித் தாக்குதலில், யுக்ரைன் அனுப்பிய 133 டிரோன்கள் வானிலேயே இடைமறித்து அழிக்கப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

----------

ஜெர்மனியில் நேற்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில், ஒருவர் உயிரிழந்ததாகவும், 29 பேர் காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

----------

கர்நாடக மாநிலத்தில் நிலவும் வறட்சி குறித்த ஆய்வுக் கூட்டம், அம்மாநில முதலமைச்சர் திரு. டி.கே. சிவகுமார் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

----------

கலாம்கோ சலாம் என்ற நாடுதழுவிய பிரச்சாரத்தை பிஜேபி இன்று தொடங்குகிறது.

----------

அயோத்தி ராமர் கோவில் நன்கொடை முறைகேடு தொடர்பான வழக்கை உச்சநீதிமன்றம் இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறது.

----------

தமிழகத்தில் சிறுபான்மையின மக்களின் நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ஷாஜஹான் தெரிவித்துள்ளார்.

----------

சிவகாசி அருகே செங்கமலத்தில் சட்டவிரோதமாக செயல்பட்டு வந்த பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

----------

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் காவிரி கரையோரம் உள்ள நகராட்சிப் பொதுக் கழிப்பிடத்தை முறையாக பராமரித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

----------

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் நூற்றுக்கும் அதிகமான மருத்துவர்கள் ஒன்றிணைந்து இலவச சிறப்பு மருத்துவ முகாமை நடத்தினர்.

----------

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் மீராபாய் சானு தங்கப் பதக்கம் வென்றார்.

Glasgow-வில் நடைபெற்றுவரும் பளுதூக்கும் போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், அவர் தொடர்ந்து மூன்றாவது முறையாக தங்கப் பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தங்கப்பதக்கம் வென்றுள்ள மீராபாய் சானுவிற்கு குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

--------------

காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டி தில்லியில் இன்று தொடங்குகிறது. இதில் 35க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

--------------

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 35 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹராரேயில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் ஆடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 192 ரன் எடுத்தது.

193 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஜிம்பாப்வே அணி, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 157 ரன் எடுத்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில், இந்தியா மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.

----------------

ராஞ்சியில் நடைபெற்று வரும் துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் ஜாம்ஷெட்பூர் அணி 5 - 0 என்ற கோல் கணக்கில், Defender அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய ராணுவ அணி 1 - 0 என்ற கோல் கணக்கில், Samaleswari அணியை வென்றது.

---------------

அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டியில் மும்பை அணி பட்டம் வென்றது.

கோவாவில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், அந்த அணி, கோவா அணியை வென்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

<<<<The End>>>>